பத்திரிக்கை செய்தி

தற்காலிக மின் இணைப்பு பெற வேண்டி லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய உதவி செயற்பொறியாளருக்கு 2 ஆண்டுகள் சிறை

புகார்தாரர் திரு.குத்தால விசேஷ், ஸ்பென்சர் காலனி, ரெட்டியார் ரோடு, திருநெல்வேலி மாநகரம் அவர்கள் தனக்கு சொந்தமான 10 சென்ட் இடத்தில் புதிதாக வீடு கட்டுவதற்கு 25.06.2009ம் தேதி தற்காலிக மின் இணைப்பு பெற வேண்டி பெருமாள்புரம், மின்சார வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் மற்றும் திரு.உதயகுமார், வணிக உதவியாளர், பெருமாள்புரம், மின்சார வாரியம், திருநெல்வேலி மாநகரம், அவர்கள் தங்களுக்கு ரூ.7,500/- லஞ்சமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, திருநெல்வேலி பிரிவில் புகார் அளித்தார். இப்புகாரின் அடிப்படையில் பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 30.06.2009 மேற்கொள்ளப்பட்டு திரு.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் மற்றும் திரு.உதயகுமார், வணிக உதவியாளர் புகார்தாராிடமிருந்து லஞ்ச பணம் ரூ.7,500/- பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையால் கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது திருநெல்வேலி தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 29.10.2025 திரு.சிவக்குமார், உதவி செயற்பொறியாளர் மற்றும் திரு.உதயகுமார், வணிக உதவியாளர் அவர்களுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டது.